## DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No.88/2024**

Deposition of Witness of PW12

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜகண்ணன் | Calling | : |
| Father/Husband's Name | : | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 22nd January 2026.

எதிரி ஆஜரில் உள்ளார்.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது அரச்சலூர் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி காவல் ஆய்வாளர் தங்கவேல் ஆவார். அவர் தற்போது உடல்நிலை சரியில்லாமல் நரம்பியல் பிரச்சனை சம்பந்தமாக சிகிச்சை எடுத்து வருவதாலும், ஞாபகமறதியில் இருப்பதாலும், ஆவணங்களின் அடிப்படையில் இந்நீதிமன்றத்தின் அனுமதியுடன் அவரின் சார்பாக நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 17.09.2018ம் தேதி அரச்சலூர் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளர் கிருஷ்ணராஜ் நிலைய அலுவலில் இருந்தபோது பழனிசாமி என்பவர் கொடுத்த புகாரின் பேரில் நிலைய குற்ற எண். 195/2018, சட்ட பிரிவுகள் 279, 337, 304(A) இதச ன் கீழ் வழக்கு பதிவு செய்து புலன் விசாரணைக்காக வழக்கு கோப்பினை காவல் ஆய்வாளர் தங்கவேல் வசம் ஒப்படைத்திருந்தார்.

2. அவர் இவ்வழக்கினை புலன் விசாரணை எடுத்து கொண்டு 17.09.2018 ம் தேதி காலை 9.00 மணிக்கு வழக்கின் சம்பவ இடத்திற்கு சென்றும், சாட்சிகள் சண்முகம், ஜெகநாதன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி பார்வை மகஜரில்

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.01.22 18:38:09 +0530

சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார். 17.09.2018ம் தேதி காலை 10.00 மணிக்கு காங்கயம் அரசு மருத்துவமனை சென்று இறந்து போன கௌஸ்மௌதீன் என்பவரது பிரேதம் மீது சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்துள்ளார். **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு இறப்பின் மருத்துவ ரீதியான காரணம்அறியும் பொருட்டு கிருஷ்ணமூர்த்தி என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பி வைத்துள்ளார். சாட்சிகள் பழனிசாமி, ஆறுமுகம், சண்முகம், ஜெகநாதன், ஜேஸ்மின், ஆபிப்அலி, காஜாமைதீன், பாபு, நாகூர்மீரான் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பெற்றுள்ளார்.

3. சம்பவ இட விசாரணையிலிருந்தும், சாட்சிகளின் வாக்குமூலத்தில் இருந்தும் சம்பவம் நடந்தது உண்மையென தெரிந்து எதிரி சிவகார்த்தியை தேடி வந்த நிலையில் சம்பவ இடத்தில் இருந்து எதிரி ஓட்டி வந்த வாகனமான TN 33 N 2737 என்ற பேருந்தினையும் மற்றொரு வாகனமான TN 33 N 2760 என்ற பேருந்தினையும் மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பி வைத்துள்ளார். சாட்சிகள் முருகேசன், தீபக், யுவராஜ், குமாரசாமி, செல்வராஜ், பிரேம்குமார், செந்தில், மணிகண்டபூபதி, சந்திரசேகரன், ஜாஸ்மின், காசிப்அலி, காஜாமைதீன், பாபு, நாகூர்மீரான், சண்முகம், ஜெகநாதன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

4. தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக திருப்பூர் மண்டலம், பழனி கிளை உதவி பொறியாளர் தியாகராஜன் என்பவரை விசாரித்து TN 33 N 2737 என்ற பேருந்திற்கான 17.09.2018ம் தேதி பணிநியமித்த சான்றினை பெற்று அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **பணிநியமன சான்றிதழ் நகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக கோயமுத்தூர் மண்டலம், ஈரோடு கிளை மேலாளரான ஜோசப் சார்லி என்பவரை விசாரித்து TN 33 N 2760 என்ற பேருந்திற்கான 17.09.2018ம் தேதி பணிநியமித்த சான்றினை பெற்று அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **பணிநியமன சான்றிதழ் வா.சா.ஆ.7ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஈரோடு கிழக்கு மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் சென்றும், விபத்தில் சம்பந்தப்பட்ட இருசக்கர வாகனங்கள் இரண்டிற்கும் வாகன ஆய்வறிக்கை பெற்றும், வாகன ஆய்வாளர் திரு.சதாசிவம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். TN 33 N 2737 **வாகனத்தின் ஆய்வறிக்கை அ.சா.ஆ.8**

VIJAYAKUMAR K
Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.01.22 18:38:14 +0530

**ஆகவும்,** TN 33 N 2760 **வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப் படுகிறது.**

5. விபத்தில் காயம்பட்ட பட்டியல் சாட்சிகளான தீபக், யுவராஜ், குமாரசாமி, செல்வராஜ், பிரேம்குமார், மணிகண்டபூபதி, செந்தில் ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த ஈரோடு அரசு மருத்துவமனை மருத்துவர் முகமது அப்சார் என்பவரை விசாரித்து **விபத்து பதிவேட்டு சான்றிதழ்கள் முறையே அ.சா.ஆ.10, 11 12, 13, 14, 15, 16 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அ.சா.3 தீபக் மற்றும் அ.சா.7 சந்திரசேகருக்கு சிகிச்சை அளித்த ஈரோடு டிரஸ்ட் அரசு மருத்துவமனை மருத்துவர் பெரியசாமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து **காயச் சான்றிதழ்கள் முறையே அ.சா.ஆ.17, 18 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தீபக் மற்றும் சந்திரசேகரின் விபத்து போலீஸ் இன்டிமேசன் அ.சா.ஆ.19, 20 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இறந்து போன கௌஸ்மைதீன் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் கார்த்திக்ராஜ் என்பவரை விசாரித்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றுள்ளார். **பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.21 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6. விபத்து ஏற்படுத்திய அரசு பேருந்து ஓட்டுனரான எதிரி சிவகார்த்திகேயன் அரசு போக்குவரத்து கழகத்தில் இருந்து தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளது தெரியவந்ததாலும் அவர் தொடர்ந்து தலைமறைவாக இருந்து வந்ததாலும் தனது புலன் விசாரணையை முடித்து தலைமறைவு எதிரியாக எதிரி சிவகார்த்திகேயனை பாவித்து சட்டபிரிவு 279, 337 (8 எண்ணிக்கை), 304(A) இதச பிரிவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை**

முதல் தகவல் அறிக்கையில் காலம்–3சி–ல் பொது நாட்குறிப்பு குறிப்பிடப் படவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு 7 நாட்கள் காலதாமதமாக அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்தில் சம்பந்தப்பட்ட TN 33 N 2760, TN 33 N 2737 ஆகிய 2 பேருந்துகளும் அரசு பேருந்துகள் என்றால் சரிதான். ஓட்டுனர், நடத்துனர் ஆகியவர்கள் அரசு பணியாளர்கள் என்றால் சரிதான். விபத்து நடந்த இடமானது குறுகிய இடம் என்றால் சரியல்ல. 2 பேருந்துகளும் நேருக்குநேராக செல்லமுடியாது என்றால் சரியல்ல, செல்லமுடியும்.

2. நான் எதிரியை சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் புகார்

VIJAYAKUMAR K Digitally signed by VIJAYAKUMAR K Date: 2026.01.22 18:38:20 +0530

பெற்று அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப் படவில்லை என்றும், சாட்சிகளை சரிவர புலன்விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. அரசு பேருந்தின் ஓட்டுனரான எதிரி விபத்து நடந்தவுடன் பேருத்தினை விட்டுவிட்டு சம்பவ இடத்தில் இருந்து தப்பி ஓடிவிட்டார். மேற்படி விபத்து நடந்த இடத்தில் இருந்து எதிரி தப்பி ஓடிவிட்டதாக வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன், இந்த வழக்கின் அரசு தரப்பு சாட்சிகள் யாரும் விபத்து நடந்ததாக சொல்லும் சமயத்தில் எதிரியானவர் சம்பவ இடத்தில் இருந்து தப்பி ஓடிவிட்டார் என குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை என்றால் தவறானது, வழக்கின் விசாரணை அதிகாரி தனது விசாரணையில் தெரியவந்ததை வழக்கு கோப்பில் குறிப்பிட்டுள்ளார்.

3. வழக்கின் விசாரணை அதிகாரி சொன்னபடி சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் சாட்சிகளை விசாரணை செய்யாமல் வழக்கு ஆவணங்கள் அனைத்தும் விசாரணை அதிகாரியால் தயார் செய்யப்பட்டு இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால்சரியல்ல. பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் குறிப்பிட்டவாறு தயார் செய்யப்படவில்லை என்றும், காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.01.22 18:38:24 +0530